දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.

අමාත්‍යතුමා / அமைச்சர் / Minister: 2784832, 2784807, 2785617

ලේකම් / செயலாளர் / Secretary: 2784812

කාර්යාලය / அலுவலகம் / Office: 2785141-50, Fax: 2784846

ඊමේල්/ஈ-மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk

ඔබේ අංකය / உமது இல. / Your No. ........................................

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

"ඉසුරුපාය"
බත්තරමුල්ල.
"இசுருபாயா"
பத்தரமுல்ல.
"Isurupaya"
Battaramulla.

මගේ අංකය / எமது இல. / My No.: ஈ-டி/01/12/01/07/01, பாடசாலை-செயற்பாடுகள்....... தனியார் பாடசாலை

දිනය / திகதி / Date: 2004.04.27

சுற்றறிக்கை இலக்கம் - 2004/15

சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள்,
பாடசாலை அதிபர்கள்,
பிரிவெனாதிபதித் தேரர்கள்.

## 5ஆம் ஆண்டின் புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் மாணவருதவி வழங்குவதற்காகக் கருத்திற் கொள்ளப்படும் பெற்றார்கள்/சட்டபூர்வமான பாதுகாவலர்களின் வருடாந்த வருமான எல்லையைத் திருத்தியமைத்தல்

5ஆம் தர புலமைப்பரிசில் தாரர்களில் மாணவர் உதவியைப் பெற்றுக்கொள்வது தொடர்பாக, வருடாந்த வருமான எல்லையைத் திருத்தி அமைத்துள்ள கல்வி அமைச்சின் செயலாளரின் எச்.ஆர்டி/ஈகியூடீ/2002/20 இலக்கத்தையும் 2002.08.15 திகதியையும் கொண்ட சுற்றறிக்கையின் 03ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள 02 அம்சங்களுக்கும் மேலதிகமாகக் கீழ்க் குறிப்பிடப்படும் வாசகங்களும் சேர்க்கப்படுகின்றன என்பதை தயவாய் அறியத் தருகிறேன்.

iii. 2003ஆம் ஆண்டிற்கு முன்பு பெற்றார்களின் வருடாந்த வருமான எல்லை ரூ 6000/- அல்லது அதற்குக் குறைவான நிலையில் மாணவருதவி பெற்றவர்களின் தற்போதைய மாணவருதவி வருமான எல்லை 2003 ஜனவரி மாதம் தொடக்கம் ரூபா 24000/- என்று திருத்தியமைக்கப்படுகின்றது.

iv. அதன்படி ஏற்கனவே மாணவருதவி பெறுகின்ற மாணவரின் பெற்றார்களின் வருமானம் ரூபா 24000/- வரை வருடாந்தம் அதிகரிக்கப்பட்ட போதிலும் அம்மாணவ மாணவியர்களுக்கும் மாணவருதவி வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தயவாய் அறியத் தருகிறேன். எவ்வாறாயினும் இம்மாற்றங்களை அடிப்படையாகக் கொண்டு 2003ஆம் ஆண்டிற்கு முன்பு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்று தற்போது மாணவருதவி பெறாத மாணவர்களுக்கு மாணவருதவி பெறும் உரிமை இல்லை என்பதை மேலும் வலியுறுத்த விரும்புகிறேன்.

இந்திராணி காரியவசம்
மேலதிக செயலாளர்,
கல்வி பண்பு சார் விருத்தி.

ஒப்பம்:
வைத்திய தாரரா டி மெல்
செயலாளர்,
கல்வி அமைச்சு.

பிரதிகள்:

i. பரீட்சை ஆணையாளர் நாயகம்
ii. தவிசாளர், தேசிய கல்வி ஆணையம்
iii. பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்
iv. பிரதம கணக்காளர், கல்வி அமைச்சு
v. சகல பிரதேச செயலாளர்கள்.